செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

1970 ஜூலை 4 சனிக்கிழமை

...ல்: 1072

விலை சதம் 5

RECEIVED
University ... Sri Lanka
...7...8
Periodicals Division
Library

## இரண்டு நாட்களாக தேடுதல் நடைபெறுகிறது

# மீனவர்கள் நால்வர் கரை திரும்பவில்லை!

தலைமன்னார், ஜூலை 4

### ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்ற நால்வர் இன்னும் கரை திரும்பவில்லை!

நேற்று முன்தினம் மாலை 3-30 மணிக்கு தலைமன்னார் கரையிலிருந்து இந்தநால்வரும் மீன்பிடிக்கச் சென்றதாகவும் இவர்கள் சென்ற படகு இன்னும் கரை திரும்பவில்லையென்றும் பொலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

"என். ஜீ. 288" இலக்கமிடப்பட்ட சாம்பல் நிற இயந்திரப் படகு ஒன்றிலேயே இவர்கள் கடலுக்குச் சென்றதாக கூறப்பட்டது.

இவர்கள் நால்வரையும் கண்டு பிடிப்பதற்கு கடந்த நான்கு நாட்களாக தலைமன்னார் பொலீஸார் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

ஜூலியஸ், ரத்னசூரிய, வில்சன், ஜோன் ஆகிய நால்வருமே சம்பந்தப்பட்ட மீனவர்களாவர். இவர்களுடைய குடும்பத்தினரும் கிராமத்து மக்களும் இச்சம்பவத்தினால் பெரும் பதட்டமடைந்துள்ளனர்.

இவ்விஷயமாக தலைமன்னார் பொலீஸார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ல)

### மினுட்சி



என்னுங்க, இங்கிலாந்தில் வாழைப்பழத் தோலில் "செக்" எழுதி மாற்றுகிறார்களாமே!

அப்படியென்றால் அதை மாற்றுவதற்கு முன்பு அது அழிந்தால் பணம் கொடுக்கத் தேவையில்லையாக்கும்!

### மான் என எண்ணி நண்பனை சுட்டார்

நண்பனுடன் காட்டுக்கு வேட்டையாடச் சென்ற ஒருவர், புதர் ஒன்றுக்குப் பின் இருந்த தனது நண்பனையே மான் என எண்ணி சுட்டுக் கொன்ற சம்பவம் ஒன்று பற்றி அறிவிக்கப்படுகிறது.

நிக்கவரெட்டியாவைச் சேர்ந்த டி. எம். சந்தாரத்ன என்ற 28 வயது இளைஞனே இவ்வாறு மாண்டார்.

இவ்விஷயமாக நிக்கவரெட்டியாவைச் சேர்ந்த ஒருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். (ல)

### கதிர்காமத்தில் கொடியேற்றம்

கதிர்காமக் கந்தனின் ஆடி மகோற்சவம் இன்று நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பதினைந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொள்ள பெருந்திரளான பக்தர்கள் கூட்டம் திரள்கிறது. (15)



சூடு அதிகம் என்றால் அதைத் தணிப்பதற்குப் பல வழிகள் உண்டு. தளதள வென்று வளர்ந்த உடலில் திறந்த ஆடை அணிந்து இளந் தென்றல் கொஞ்சி விளையாட இடமளித்து சூட்டைத் தணிக்கிறாள் இங்கிலாந்து அழகு ராணி செல்வி ஈவோன் ஓர்ம்ஸ்.

## வர்த்தக வங்கிகளில் பணம் முதலீடு குறைவு

நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகளில் பணம் போடுவதை விட, எடுப்பதே அதிகம் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

அடுத்த வரவு – செலவுத் திட்டத்தில் தங்கள் பணத்துக்கு என்ன நடக்குமோ என செல்வந்தர்கள் பீதியடைந்திருப்பதே இதற்கான காரணம் என வர்த்தக வங்கிகளின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இந்நாட்களில் சிறந்த வாடிக்கையாளர்களுக்குக்கூட கடனுக்குப் பணம் வழங்குவதைப் பல வர்த்தக வங்கிகள் நிறுத்தி உள்ளன. இதனால், பல ஏற்றுமதி நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வீடுகள் கட்டுவதற்குப் பல தனியார் கம்பெனிகள் வட்டிக்குக் கடன் உதவி அளித்து வந்தன. இதனால் புதிதாகக் கட்டப்படும் வீடுகளின் எதிர்காலம் என்ன ஆகுமோ என இக்கம்பெனிகள் பீதியடைந்துள்ளதால் கடன் வழங்குவதையும் நிறுத்தி உள்ளன. (ல)

## இரவு 8–30 மணி வரை

### சகல கடைகளும் திறந்திருக்க வேண்டும்

கடைகள் எல்லாவற்றையும் இரவு 8-30 மணி வரை திறந்து இருக்கச் செய்ய தொழில் அமைச்சர் திட்டம் தீட்டுகிறார்.

இப்படிச் செய்வதால் இப்பொழுதுள்ள ஊழியரைப் போல், இன்னும் 50 சத வீதமானோர்க்கு வேலை வசதிகள் கிடைக்கலாம் என அமைச்சர் நம்புகிறார்.

இதற்கான திட்டத்தை தொழில் அமைச்சர் திரு. எம். பி. டி. இசற். சிறிவர்த்தன அமைச்சர் அவைக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் கோருவார்.

அநேக வர்த்தக ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு தகுந்த ஓய்வு, குடிக்கத் தண்ணீர் கக்கூஸ் வசதிகள் என்பன இல்லாத குறைகள் இருக்கின்றன. இவைகளைத் தொழில் ஸ்தாபனங்கள் செய்து கொடுக்கும்படி சட்டம் இயற்றப்பட வேண்டும்.

ஊழியர்கள் நலன் கருதி இன்னும் பல முன்னேற்றகரமான ஆக்க வேலைகள் செய்ய, அதிகாரிகளை அறிக்கை தயாரிக்கும்படியும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (15)

## கர்ப்பச் சிதைவுக்கு உதவ தாதிகள் மறுத்தனர்

லண்டன், ஜூலை 3

கர்ப்பச் சிதைவு சத்திர சிகிச்சையில் உதவியளிக்க, செஷயர் ஆஸ்பத்திரி ஒன்றில் கடமையாற்றும் இரு தாதிகள் மறுத்து விட்டனர்.

மனச்சாட்சிச் சட்டம் என்னும் பிரிவுக்கிணங்க அவர்கள் இதில் பங்குபற்ற மறுத்து விட்டனர்.

"உயிர்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ள இவர்களுக்கு இத்தகைய சத்திர சிகிச்சைகள் வெறுப்பை அளித்திருக்கலாம்" என ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் கூறினார்.

துப்புரவாக்கும் தொழிலாளர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதாலேயே தாதிகள் இவ்வேலையையும் செய்ய வேண்டி ஏற்பட்டது. சில வாடிக்கையாளர்கள் எவ்வளவு பணத்தைக் கொடுக்கத் தயாராயிருந்தாலும், துப்புரவாக்கும் தொழிலாளிகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளைத் திருமணம் செய்ய உறுதியளித்தவர்

# ரூ. 2000 சீதனம் வாங்கி ஏமாற்றிவிட்டாராம்

## பள்ளிவாசலில் பணம் கொடுபட்டது

**"எனது மகளை எதிரி திருமணம் செய்ய உறுதி அளித்தபடியால் ரூபாய் 2,000 சீதனம் கொடுக்கச் சம்மதித்தேன். அவர் என்னிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு, மகளை மணம் முடிக்காமல் மறைந்து ஓடிவிட்டார்."**

மத்துகம மாஜிஸ்டிரேட் திரு. நிஸங்கா விஜயரத்தின முன்னிலையில் விசாரிக்குப்பட்ட வழக்கில் மனுதாரரான ஏ. ஆர். எம். இப்ராஹிம் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

பதுரளலியா பொலிஸ் பகுதியில் உள்ள பெலந்த என்னுமிடத்தைச் சேர்ந்த இஸ்மாயில் மொஹமட் சமூன் என்பவர், களுத்துறை பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த ஏ. ஆர். எம். இப்ராஹிம் என்பவரை ஏமாற்றி ரூ. 2,000 பெற்றார் என இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

மனுதாரரான ஏ. ஆர். எம். இப்ராஹிம் மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"எதிரி என் வீட்டுக்கு அடிக்கடி வருபவர். அவரை எனக்கு நன்கு தெரியும். 1968 பெப்ரவரியில் எதிரியின் சகோதரியும் மைத்துனரும் எனது இரண்டாவது மகளுக்கு கல்யாணம் பேசினர். எதிரி என் மகளை மணம் முடிக்க விரும்புகிறார் என்று அவர்கள் சொல்ல, நான் சம்மதித்தேன். அவர்கள் கேட்டபடி ரூ. 2,000 சீதனமாகக் கொடுக்கவும் சம்மதித்தேன். 1969 பெப்ரவரி 16-ம் திகதி பள்ளிவாசலில் சந்தித்து முடிவாக தீர்மானிப்பதாகக் கூறினார்கள்.

"குறிப்பிட்ட திகதியில் பணத்துடன் பள்ளிவாசலுக்குச் சென்றேன். எதிரி சுற்றத்தாருடன் அங்கு வந்தார். முஸ்லிம் சம்பிரதாயப்படி நான் சீதனப் பணத்தை எதிரியின் கையில் கொடுத்தேன். எதிரி பணத்துடன் தன் வீட்டுக்குச் சென்றார்.

"நாட்கள்சென்றன. ஆனால் திருமணம் நடைபெறவில்லை. சீதனப் பணத்தைக் கொண்டு போன மாதிரி என் மகளையும் கூட்டிக் கொண்டு போகவும் என அவருக்குப் பல கடிதங்கள் எழுதினேன்.

"பதில் வராமற் போகவே, பள்ளிவாசல் கமிட்டியிடம் புகார் கூறினேன். அதற்கும் சரி வராமற் போகவே பொலீஸில் புகார் செய்தேன்."

மேல் விசாரணை அக்டோபர் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது. (15)

## நீச்சலுடையில் ஜாக்குலின்

ஒனாஸிஸ் – ஜாக்குலின் ஜோடியின் 20 மாதக் காதல் வாழ்வு விரைவில் முறியப் போகிறது என்று வதந்திகள் பல உலாவின அல்லவா?



இந்த வதந்திகளையெல்லாம் முறியடிப்பதற்கு கிரேக்க கோடீஸ்வரரான ஒனாஸிஸ் ஒரு தந்திரம் செய்தார்-

காதல் மனையாட்டியுடன் தனக்குச் சொந்தமான ஸ்கோர்பியஸ் தீவு என்னும் சொர்க்கபுரிக்கு விடுமுறையைக் கழிக்கச் சென்றுவிட்டார் ஒனாஸிஸ்-

இவர்கள் இருவரும் தனிமையில் நடத்திய இன்பக் கேளிக்கைகளை ஒரு பத்திரிகைப் படப்பிடிப்பாளர் விசேஷ கமரா மூலம் படம் பிடித்து விட்டார்-

இந்தப் படங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட போது பழைய வதந்திகள் யாவும் தவிடுபொடியாகி விட்டன-

ஆனாலும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கெனடியின் மனைவியான அழகி ஜாக்குலின் பல நவீன ஆடைகளில் தோன்றுவதை எல்லாம் கண்டு ரசித்த அமெரிக்க மக்களுக்கு, அவர் நீச்சலுடையில் தோன்றும் காட்சியைக் காணப் பேரிடியாகத்தான் இருந்தது! (ம)

## வாழைப்பழத் தோலில் 'செக்' எழுதி கொடுத்தார்

கேம்பிரிட்ஜ், ஜூலை 3

பல்கலைக்கழக விரிவுரையாளர் விருந்துக் கேளிக்கையின் உச்சக் கட்டத்தில் இருக்கும் போது வாழைப்பழத்தின் மேல் 25 ஷிலிங்குக்கு செக் எழுதிக் கொடுத்தார்.

விருந்தை ஒழுங்கு செய்தவரிடம் திரு. கிறிஸ்தோபர் டொபேர்ட்டி என்பவர் பார்கிளே வங்கி பேரில் இந்தச் செக்கை எழுதிக் கொடுத்தார்.

மிட்லண்ட் வங்கியில் இந்த வாழைப்பழ செக்கைக் கொடுத்த போது, விசேட மெஸஞ்சர் மூலமாக பார்கிளே வங்கிக்கு இதை அனுப்பி மாற்றச் செய்தார்கள்.

"இதைப் போன்று முட்டை, பீங்கான் கோப்பைகளிலும் செக்குகள் எழுதி அனுப்பப்பட்டுள்ளன. அடிக்கடி இப்படி நடந்தால் எங்கள் வங்கி வேலைகள் தாமதப்படலாம்" என மிட்லண்ட் வங்கி மனேஜர் கூறினார்.

பார்கிளே வங்கி உதவி மனேஜர் இதுபற்றிக் குறிப்பிடுகையில் "வங்கி ஊழியர் ஒருவர் வாழைப் பழத்தைச் சாப்பிட்டு விட்டார். ஆனால் செக் எழுதப்பட்ட வாழைப்பழத் தோல் கெட்டுப் போகுமுன் வாடிக்கையாளருக்கு அனுப்பி வைக்கப்படும்" என்று கூறினார். (15)

## இராணுவத்தினர் கைது செய்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 3

மாதகல் இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் ரோந்து சுற்றி வருகையில், மாதகல் – சேந்தான்குளம் வீதியில் மாணிக்கம் சிவரத்தினம் என்பவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து சோதனையிட்டனர்.

பிரஸ்தாப நபரிடம் 20 கொத்து அரிசி, திசையறி கருவி ஒன்று, சாரங்கள் ஆகியன இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன.

சந்தேக நபர் காங்கேசன் துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சேந்தான்குளம் துறைமுகத்தில் உள்ள வள்ளம் ஒன்றில் இருந்து இப்பொருட்கள் களவாடப்பட்டதாக அறிய வந்துள்ளது. மேலும் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (220)

## லலிதா பத்மினியைக் கடத்திய மூவர் கைது

"இந்தச் சம்பவம் எனக்கு நினைவிலிருக்கிறது. அன்றிரவு கதவுகளை எல்லாம் மூடிவிட்டு நானும், வீட்டில் உள்ளோரும் படுக்கைக்குப் போனோம்.

"இரவு 10 மணியளவில் பின் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. வீட்டில் தேடிப் பார்த்த பொழுது என் மகளைக் காணவில்லை. பொலீஸில் முறைப்பாடு செய்தேன். அடுத்தநாள் காலை ஒரு இளைஞனுடன் ஹோட்டல் ஒன்றுள் வைத்து இருவரும் கைது செய்யப்பட்டனர்."

பொலீஸ் கான்ஸ்டபிள் ஈ. கே. எம். கப்புருபண்டா என்பவரே மேற்கண்டவாறு சாட்சி கூறினார்.

இவ் வழக்கில் லலிதா பத்மினி என்னும் மைனர் பெண்ணைக் கடத்திச் சென்றதாக கே. ஜினேரிஸ், பீ. சோமசிரி, வி- மரியநாயகம் என்பவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

சாட்சி மேலும் கூறுகையில், "1956 ஜனவரியில் என் மகள் பிறந்தவள். சம்பவம் நடந்த அன்றிரவு 10 மணியளவில் பின் கதவு திறபடும் சத்தம் கேட்டுப் போய்ப் பார்த்தேன். சந்தேகப்பட ஒன்றும் நடைபெறாதபடியால் திரும்பப் படுத்துவிட்டேன்.

நடு இரவில், கதவு திறந்திருப்பதாக மகன் சத்தமிட்டான், எழும்பிப் பார்த்த போது மூத்த மகளைக் காணோம்.

முதல் எதிரியின் வீடு 300 யார் தூரத்தில் உள்ளது. அந்நேரம் அங்கு நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன். ஹோட்டலில் ஒரு இளைஞனுடன் என் மகள் இருந்த பொழுது கைது செய்யப்பட்டு, காலையில் பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்" என்று கூறினார்.

குறுக்கு விசாரணையின்போதுதான் பலபேரை பலவிடங்களில் நிறுத்தி இருவரையும் கண்டு பிடிக்க முயற்சித்ததாகவும் கூறினார்.

எதிரியின் வழக்கறிஞர்:— முதலில் எங்கு தேடினீர்?

சாட்சி:— "கக்கூசிலும், கிணற்றிலும்."

வழக்கறிஞர்:— ஒரு இளைஞனைக் குத்த முயன்றதாக உமக்கு எதிராக வழக்குண்டா?

சாட்சி:— "ஆம்."

மேல் விசாரணை ஜூலை 23-ம் திக்கு ஒத்திவைக்கப்பட்டது. (15)

## கோர்ட்டில் சந்தேக நபர்கள்

பஸ் கண்டக்டரைக் கத்தியால் குத்தியதற்காக அறுவர் குற்றஞ் சாட்டப்பட்டு, கொழும்பு தெற்கு நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டனர்.

இக் கத்திக்குத்துச் சம்பவம் மே மாதம் 25-ம் திகதி வெள்ளவத்தை ரொக்சி தியேட்டருக்கு முன்பாக நடைபெற்றது.

கே. இரத்தினதாஸ அல்லது லுலும்பா, எல். லயனல் நடராசா, அமரசேன, பி- எல். சிரிசேன, பி- எச்- சேனபெருண்டோ ஆகியோரே சந்தேக நபர்களாவர். (15)

## விழிப்பாய் இருத்தல் வேண்டும்

இலங்கையரின் வங்கிகள் இங்குள்ளாரின் விவசாய, கைத்தொழில் முயற்சிகளுக்கு உதவியாகப் பணம் கொடுத்து வாங்குகின்றன- ஆனால், இங்குள்ள வெளிநாட்டவர்களின் வங்கிகள் சில இன்றும் இத்தகைய முயற்சிகளுக்குப் பணம் உதவ மறுத்து விடுகின்றன, அல்லது பெரும் கைத்தொழில் மன்னர்களுக்கே கொடுத்து உதவுகின்றன- அதாவது, சிறிய கைத்தொழில் அதிபர்களுக்கும், விவசாயிகளுக்கும் பணம் கொடுத்து வாங்காதிருக்கின்றன- நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவாத வெளிநாட்டவரின் வங்கிகளால் இந்த நாட்டவர் எவருக்கும் ஏதாவது பயன் உண்டா? எனவேதான் அவ்வங்கிகளுடைய வங்கி நடைமுறைகள், செயல்கள் முதலியவைகள் மீது அரசு விழிப்பாய் இருத்தல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்-

தந்தி

**தந்தி**
**சிறு விளம்பரங்கள்**

### விற்பனைக்கு

கட்டிட பொருட்கள்

இறக்குமதி செய்யப்பட்ட முதல் தரமான போட்லான்ட் சீமெந்து 11-75 வீதம் பெற்றுக் கொள்ளலாம். பிரின்ஸ்லீ டிரேடிங் கம்பனி, 414/21, கே. சிறில் சி. பெரேரா மாவத்த, கொழும்பு-13. R. 66829

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்த்திருக்க படுக்கை அறையில் நாடகம்

# கணவர் நைட் டியூட்டி செல்ல மனைவி ஐல்சா!

## விவாகரத்து வழக்கில் பணிப்பெண் சாட்சியம்

**முறைப்பாட்டுக்காரர் இரவில் டியூட்டிக்குச் சென்ற பின்னர் முறைப்பாட்டுக்காரரின் மனைவியும் இரண்டாவது எதிர் மனுதாரரான சப் இன்ஸ்பெக்டரும் கட்டிலில் படுத்திருந்து சரசமாடுவதைக் கண்டிருக்கிறேன்.**

கண்டி மாவட்ட நீதிபதி திரு சி. பி. வலகம்பாய முன்னிலையில் நடைபெற்ற விவாகரத்து வழக்கு ஒன்றில் பணிப் பெண் ஒருத்தி சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு சொன்னாள்.

இந்த வழக்கில் கண்டி போகம்பரை சிறையைச் சேர்ந்த சிறைக் காவலாளியான எஸ். ஏ. எம். பி- சேனநாயக்கா என்பவர் முறைப்பாட்டுக்காரர்.

தனது மனைவியான சுவர்ணா சேனநாயக்காவிடம் இருந்து விவாகரத்து கோரி, இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

முதலாம் எதிர் மனுதாரரான தனது மனைவி தன்னை வேண்டுமென்றே கைவிட்டுச் சென்றதாகவும், அங்கம்பிட்டியாவைச் சேர்ந்த இரண்டாவது எதிர் மனுதாரரான பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சந்திரா திஸநாயக்காவுடன் கள்ள உறவு வைத்திருந்ததாகவும் முறைப்பாட்டுக்காரர் தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

தனது குழந்தையான நிமாலி திபிக்கா சேனநாயக்காவைத் தனது பாதுகாப்பில் விடுமாறும், இரண்டாவது எதிர் மனுதாரரான சந்திரா, திஸநாயக்காவிடம் இருந்து ரூபா 25 ஆயிரம் நஷ்ட ஈடாகப் பெற்றுத் தருமாறும் முறைப்பாட்டுக்காரர் தனது மனுவில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம் ஹெட்டியாராச்சி கே. தயாவதி என்ற பணிப்பெண் சாட்சியம் அளித்தாள்.

தயாவதி தனது சாட்சியத்தில் கூறியதாவது:- "முறைப்பாட்டுக்காரரின் வீட்டில் பணிப்பெண்ணைக் கடமையாற்றி ...தேன். அங்கிருந்த சமயம் இர...டாவது எதிர் மனுதாரரையும் எனக்குத் தெரிய வந்தது. அவர் அடிக்கடி வீட்டுக்கு வருவார்.

வழக்கறிஞர்: அவர் முதல் தடவையாக வந்தது ஏன் என்று உமக்குத் தெரியுமா? — தங்குவதற்கு அறை ஒன்று தேடி வந்தார்.

வழக்கறிஞர்: வீட்டுக்கு வருவதற்கு முன்னர் அவரைச் சந்தித்திருக்கிறீரா? — ஆம் ஆஸ்பத்திரியில்.

வழக்கறிஞர்: உமது எஜமானியுடன் ஆஸ்பத்திரி போய் இருந்தீர் — ஆம்.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:- "ஆஸ்பத்திரியில் சந்தித்து எஜமானி அம்மாளும் சப் இன்ஸ்பெக்டர் ஐயாவும் கதைத்தார்கள். இதன் பின்னரே அறை தேடி சப் இன்ஸ்பெக்டர் ஐயா வீட்டுக்கு வந்தார். அதன் பின்னர் இடைக்கிடை வீட்டுக்கு வருவார்.

"எஜமானரான முறைப்பாட்டுக்காரர் இரவில் டியூட்டிக்குப் போவார். அவர்களின் படுக்கை அறைக்கு அருகில் ஒரு சாப்பாட்டு அறை இருக்கிறது.

"அந்த அறைக்குள் நான் படுப்பது வழக்கம். இரு அறைகளுக்கும் இடையில் கதவு ஒன்று உண்டு.

"முறைப்பாட்டுக்காரரான எஜமான் இரவில் டியூட்டிக்குச் சென்ற பின்னர் சப் இன்ஸ்பெக்டர் ஐயா வீட்டுக்கு வருவார். இரவில் எஜமானி அம்மாளுடன் படுக்கை அறையில் சரசமாடுவார்.

"இதைப் பற்றி எல்லாம் முறைப்பாட்டுக்காரரிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று எதிர் மனுதாரரான எஜமானி அம்மாள் என்னிடம் சொல்லுவார்.

"முறைப்பாட்டுக்காரர் வேலைக்குச் சென்ற பின்னர் எஜமானி அம்மாள் சில சமயம் வீட்டில் இருந்து வெளியே போய்விடுவதும் வழக்கம்.

"ஒரு நாள் கட்டுகஸ்தோட்டைக்கு எஜமானி அம்மாளும், அவரின் குழந்தையும் நானும் படம் பார்க்கப் போனோம். எஜமானி அம்மாள் பல்கனியில் இருந்தார். யாருடன் இருந்தார் என்று எனக்குத் தெரியாது. குழந்தையும் நானும் கீழே இருந்தோம்."

வழக்கறிஞர்: முறைப்பாட்டுக்காரரின் மனைவியும், இரண்டாவது எதிர் மனுதாரரும் சரசமாடுவதை நீர் உண்மையில் கண்டீரா? — ஆம்.

வழக்கறிஞர்: நீர் பொய் சொல்லுகிறீர் — நான் சொல்வது உண்மை.

நீதிபதி மேல் விசாரணையை ஆகஸ்ட் 2-ம் திகதி வரை ஒத்திவைத்தார். (5)

## "1-ம் எதிரி தகப்பனாரின் நெஞ்சில் குத்தினார்"

**வீட்டின்மீது யார் கல் வீசினர்கள் என்று தகப்பனார் என்னைக் கேட்டார். அப்பொழுது முதலாம் எதிரி வீட்டு வளவில் நின்றார். அவர் தகப்பனாரின் நெஞ்சில் குத்தியவாறு தானே கல் வீசியதாகச் சொன்னார். பின்னர் இரண்டாம் மூன்றும் எதிரிகள் எனது தகப்பனாரின் கையைப் பிடித்து வீதியால் இழுத்துச் சென்றனர்."**

...லப்பிட்டி நீதிபதி திரு. எஸ். ...ஜாகநாதன் முன்னிலையில் நடைபெற்ற கொலை வழக்கு ஒன்றில் சாட்சியம் அளிக்கையில் சந்திராவதி (15) என்ற பெண் இவ்வாறு கூறினார்:

இந்த வழக்கில் பி. எச். விமலசேன, பி- எச்- பியதாசா, பி- எச்- சமாறிஸ் ஆகிய மூவரும் எதிரிகள்.

மார்ச் 18-ம் திகதி மீதியகொடையில் வைத்து பி- எச்- சமேரிஸ் என்பவரைக் கொன்றதாக முதலாம் எதிரிமீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சந்திரவதி தனது சாட்சியத்தில் கூறியதாவது:—

"சம்பவதினம் இரவு 8.00 மணியளவில் யாரோ வீட்டின்மீது கல் வீசினர்கள். என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்கு எல்லோரும் வெளியே வந்தோம்.

"முதலாம் எதிரி தகப்பனாரின் நெஞ்சில் குத்தியபின்னர், இரண்டாம் மூன்றும் எதிரிகள் வீதியை நோக்கி அவரை இழுத்துச் சென்றார்கள்.

"அவரை இழுத்துச் செல்வதைத் தடைசெய்வதற்கு எனது தாயார் முயன்றபோது தாயாரின் பின்புறத்தில் மூன்றும் எதிரி இரும்புக் கம்பியால் தாக்கினார்.

இந்த வழக்கில், கொலைக்கு உடந்தையாக இருந்ததாக 2-ம், 3-ம் எதிரிகள்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நீதிபதி மேல் விசாரணையை மற்றொரு தினத்துக்கு ஒத்திவைத்தார். (5)

## குடும்பத் தகராற்றால் கணவன் மனைவி தற்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 3

கணவன் நஞ்சருந்தி இறந்த இரு மணித்தியாலத்துள் மனைவியும் நஞ்சருந்தி தற்கொலை செய்த சம்பவம் உரும்பராயில் நடைபெற்றுள்ளது.

எட்டுப் பிள்ளைகளின் தந்தை ஒருவர் குடும்பத் தகராறு காரணமாக நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். குடும்பத் தகராறு காரணமாக ஒரு மாதமாக இவர் மகன் வீட்டில் தங்கி இருந்தார்.

கணவன் நஞ்சருந்தி தற்கொலை செய்து விட்டார் என்று கேள்வியுற்றதும் மனைவியும் நஞ்சருந்தி விட்டார்.

யாழ்ப்பாணம் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணையின் போது இத் தகவல்கள் தெரிய வந்தது. (220)

## ஸ்ரீலங்கா வெற்றி

கட்டானைத் தொகுதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. தே. லி. டீ- சில்வா வெற்றிபெற்றார்.

ஐக்கியதேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட முன்னாள் எம். பி. திரு- விஜபால மெண்டிஸ் தோல்வியுற்றார். (15)


### பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டும் அநேக காலமாக பலவிதமான மருந்துகளை செய்தும் குணப்படாது மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானாலும் சரியே. எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத்துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட.

### பாரிசவாத தைலம்

கீழ்க் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உபயோகித்து பூரண சித்தியடையுங்கள். தீரும் வியாதிகள் சகல வகைப்பட்ட பாரிஸ வாதம், இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம், நடுக்கு வாதம், பச்சை வாதம், பக்க வாதம். அண்ட வாதம், இடுப்பு வாதம். குடல் வாதம், நெஞ்சு அல்லது மாரடைப்பு, மொளிகளில் வீக்கம், கற்தழும்பு, குதிக்கால் நரம்புகள் வலி, வீக்கம், உடம்பில் பற்பல ஊரல்கள். சொறி, சிரங்கு, ...லது கட்டிகள், கடிவேகம், புழு மேய்ச்சல், உடம்பி... கள், வெள்ளை படருதல். சிறுவர்களுக்கு கைகால் ... ஹீனம், முடக்கம், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, ... ஹீனம். தசை கரைந்து, கணுக்குக்கு கணு வீக்கம், முட்க... போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப்பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/-, 6 அவுன்ஸ் ரூ. 50/-
2 அவுன்ஸ் ரூ. 20/-. தபால் செலவு சதம் -/90.

### இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு

### ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறாதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து இத்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சீனி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளியாகி இளைப்பு, இருமல். சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் - பெண் இரு சாரார்களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர்களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானால் ஆச்சரியப்படக்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/-, 15 நாள் மருந்து ரூ. 20/-

தபால் செலவு -/70 சதம்.

வி. பி. பி- தபாலில் பெற்றுக்கொள்ளலாம்-

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை, பரம்பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரெத்தின முதலியார், அவர்கள் வகை.

**ஏ. எல், எம், ஜே. டி. உடையார்,**
வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்,
மடவலை பஜார், கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்காரச் சிறுமி கோரமாகக் கொலை?

# கள்ள நடத்தையை மெள்ளக் கண்டாளா

## பெண்கள் மூவரும் வாலிபனும் கைது

யாழ்ப்பாணம், ஜூலை. 3

வேலைக்காரச் சிறுமி ஒருத்தியைக் கொலை செய்து, கழுத்தில் சுருக்கிட்டு தொங்க விட்டதாகக் கூறப்படும் சம்பவம்பற்றி சந்தேகத்தின்பேரில் மூன்று பெண்களும், ஓர் இளைஞனும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எட்டுப் பிள்ளைகளுக்கு தாயான ஒரு 40 வயதுப் பெண்ணுக்கும் ஒரு வாலிபருக்கும் இடையில் இருந்து வந்ததாகச் சொல்லப்படும் தொடர்பை வேலைக்காரச் சிறுமி அறிந்ததன் எதிரொலியாக சிறுமி கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சம்பவம் புங்குடுதீவு மேற்கு [illegible]இல் நடைபெற்[illegible]

[illegible] கையர்க்கரசி ஐயம்பிள்ளை என்பவரின் வீட்டில் வேலை செய்து வந்த கல்வளையைச் சேர்ந்த வள்ளித்தாய் என்ற 12 வயதுச் சிறுமியே இவ்வாறு பரிதாபமாக இறந்துள்ளாள்.

இந்த வேலைக்காரச் சிறுமியின் மரணம் சம்பந்தமாக ஊர்காவற்றுறை பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆறுமுகம் இராசையா விசாரணை நடாத்தினர்.

மூன்றும் வட்டாரத்தைச் சேர்ந்த மேனகையம்மா, மங்கையர்க்கரசி, இராசம்மா, யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பத்மநாதன் ஆகியோரை இது சம்பந்தமாக பொலீஸார் சந்தேகத்தின்மீது கைது செய்துள்ளனர்.

புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கே. குலகலிங்கும் மரணவிசாரணை நடாத்தினர். தீர்ப்பளிப்பதை இம் மாதம் 7-ம் திகதிவரை ஒத்திவைத்தார். மேற்கொண்டும் விசாரணை நடத்துமாறு அவர் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (15)

## புணை கொலை வழக்கில் டாக்டரின் சாட்சியம்

மட்டக்களப்பு, ஜூலை 3

"காலஞ்சென்ற செல்வராஜா என்பவரது உடலிலிருந்து இரண்டு துப்பாக்கிக் குண்டுகளை அகற்றினேன். அவற்றை ஒரு சேட்டுடனும் சார்த்துடனும் பொலீஸாரிடம் கையளித்தேன்."

இவ்வாறு புணை இரட்டைக் கொலை வழக்கில் சாட்சியமளித்த டாக்டர் காசிலிங்கம் மனோகரன் சரவணமுத்து மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. டி. எஸ். நித்சிங்கா முன்னிலையில் தெரிவித்தார்.

இவ்வழக்கில் வந்தாறுமூலைக் கிராமத்தைச் சேர்ந்த சோமசேகரம் மயில்வாகனம், இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 10-ம் திகதி புணைக் கிராமத்தைச் சேர்ந்த துரையப்பா செல்வராஜா, துரையப்பா துரைராஜா ஆகிய இருவரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகவும், செல்லப்பா தெய்வானையைக் கொலை செய்ய எத்தனித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

டாக்டர் காசிலிங்கம் மேலும் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

"கடந்த ஏப்ரல் மாதம் நான் மட்டக்களப்பு பிரதம வைத்திய சாலையில் கடமை புரிந்தேன். அன்று பிற்பகல் 3-00 மணிக்கு காலஞ்சென்ற செல்வராஜாவின் உடலை புணையில் வைத்து மரணப் பரிசோதனை செய்தேன். காலஞ்சென்றவரது உடலில் 12 வெளிக்காயங்கள் இருந்தன. அவரது உடலின் உட்புறத்தில் வலது பக்கத்தைச் சேர்ந்த மூன்றும், நான்காம், ஐந்தாம், ஆறும், ஏழாம் விலா எலும்புகளும் இடது புறத்தைச் சேர்ந்த ஐந்தாம், ஆறும், ஏழாம் விலா எலும்புகளும் முறிந்திருந்தன. அவரது ஈரலில் ¾ அங்குல அளவில் ஒரு பிளவு தென்பட்டது.

"எனது அபிப்பிராயப்படி பிரஸ்தாப காயங்கள் ஒரு துப்பாக்கிச் சூட்டினாலேயே ஏற்பட்டிருக்கும் என நான் கருதுகின்றேன்.

"அத்துடன் காலஞ்சென்ற துரையப்பா துரைராஜாவையும் மட்டக்களப்பு பிரதம வைத்தியசாலையின் 10-ம் நம்பர் வார்ட்டில் நான் பரிசோதனை செய்தேன். அவரது உடலில் மூன்று வெளிப்புறக் காயங்கள் இருந்தன. இக்காயங்கள் எனது அபிப்பிராயப்படி ஒரு துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டு இருக்கலாம் என நான் கருதுகிறேன்."

வாழைச்சேனை பொலீஸைச் சேர்ந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. டி. ஆர். உடவத்தை வழக்கைத் தாக்கல் செய்தார். மேல் விசாரணை இம்மாதம் 12-ம் திகதிக்கு தள்ளிப்போடப்பட்டு உள்ளது. எதிரியை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (42)

சோஷலிஸம் உருவாக

## பணக்கார வர்க்கம் ஒழிக்கப்பட வேண்டும்

சோஷலிஸ சமுதாயம் ஒன்று இங்கு உருவாக வேண்டும் என்றால், பணக்கார வர்க்கம் ஒழிக்கப்பட வேண்டும்" என கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா கூறினர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் 27-ம் ஆண்டு விழாக் கூட்டம் ஹைட் பார்க் மைதானத்தில் நடைபெற்றது.

அங்கு பேசும்பொழுது டாக்டர் விக்கிரமசிங்கா மேலும் கூறியதாவது:-

இலங்கையில் சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கவே ஐக்கிய முன்னணியுடன் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டுச் சேர்ந்தது"

சுகவீனமுற்று இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளரும் வீடமைப்பு, கட்டடத் துறை அமைச்சருமான திரு. பீட்டர் கெனமன் இக்கூட்டத்திற்கு ஒரு செய்தியை அனுப்பியிருந்தார். (15)

## 10 பேர் மரணம்

டெல்அவிவ், ஜூலை, 3

இஸ்ரவேல் படைகள் ஆக்கிரமித்திருக்கும் பகுதியில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து கடந்த 24 மணி நேரத்தில் 10 அராபியர்கள் கொல்லப்பட்டனர்.

இக்கலவரத்தில் சுமார் 75 பேர் படுகாயமடைந்தனர். (ல)

## ஆசியு மரக்கறி

லண்டன், ஜூலை. 3

ஆசிய நாடுகளில் பயிர் செய்யப்படும் மரக்கறிவகைகளில் ஆங்கிலேயர்கள் இப்பொழுது நாட்டம் கொண்டுள்ளனர்.

விரைவில் இங்கிலாந்து அடங்கிலுமுள்ள சுதாகார உணவு நிலையங்களில் இம்மரக்கறிகள் விற்பனைக்கு வைக்கப்படும். (ம)

## மாடு திருடர் மாட்டிக்கொண்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 3

கேரதீவில் இருந்து திருடிக் கொண்டு வந்த மாட்டையும் சந்தேக நபரையும் நாயன்மார்கட்டில் நல்லூர் பொலீஸார் கைது செய்தனர்.

நல்லூர் பொலீஸைச் சேர்ந்த கமலநாதன், ஏப்ரகாம் ஆகிய இருவரும் ரோந்து சுற்றி வருகையிலேயே சந்தேகத்தின் பேரில் கந்தையா வல்லிபுரம் என்பவரையும் அவர் கொண்டு வந்த மாட்டையும் கைது செய்தனர்.

மாட்டையும் சந்தேக நபரையும் சாவகச்சேரிப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (220)

## ரூ. 8,500 நஷ்டஈடு வழங்கப்பட்டது

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு எதிராகவும், அதன் மீத்கோட்டமுல்ல டிப்போ சாரதி எச். பி. தர்மவர்த்தனவுக்கு எதிராகவும் ரூபா 20,000 நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நுகேகொட, கொகுவெல சேர்ச் வீதியைச் சேர்ந்த மைனரான ஆர். ரவீந்திர பெரேரா தனது பாதுகாவலரான பீ. பீ. ஏபிரகாம் பெரேரா மூலமாக இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. ஜே. எவ். ஏ. சொய்ஸா முன்னிலையில் இவ் வழக்கு எடுக்கப்பட்ட போது ரூபா 8,500 நஷ்டஈடு வழங்க எதிராளிகள் சம்மதித்தனர்.

1967 பெப்ரவரி 10-ம் திகதியன்று ரீட் அவனியூ சந்தியில் ரவீந்திர பெரேரா சைக்கிளில் போகும்போது, இரண்டாவது எதிரியால் செலுத்தப்பட்ட இரட்டைத்தட்டு பஸ்ஸால் மோதப்பட்டார்.

சாரதியின் கவனயீனக் குறைவாலும் வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாதபடியாலுமே இவ் விபத்து நடந்ததாகக் கூறப்பட்டது.

இவ் விபத்தால் தனக்குப் பலமான காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதால், 1967-ல் நடைபெற்ற பொதுப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமற் போய்விட்டதாக ரவீந்திர பெரேரா கூறினர்.

எதிர்மனுதார்கள் ரவீந்திர பெரேராதான் கவனயீனமாகச் சைக்கிளை ஓட்டி, விபத்துக்கு ஆளானர் என வாதாடினர். (15)


ராணி



17-5-70 இதழில்

★ நான் தந்தையாகப் போகிறேன் சிறுகதை
★ சி. ஐ. டி. சகுந்தலா பேட்டி படங்களுடன்
★ பெண்கள் ஆதிக்கம் - செய்தி
★ கற்பு என்பது என்ன? அல்லி பதில்
★ வாந்தி வந்தால்! வைத்தியம்

மற்றும் வழக்கமான அம்சங்களுடன் விற்பனையாகிறது.
வருட சந்தா ரூ. 20-80
6 மாத சந்தா ரூ. 10-40
வெஸ்டன்
த. பெட்டி 960,
கொழும்பு.



கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

S. P. S. ஜெயம் அன் கோ.
மதுரை - கொழும்பு.
விற்குமிடம்:-
34, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.
தபால் பெட்டி: 1298.
தொலைபேசி எண்: 26584





இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை).
வெளியிட்ட திகதி 4 ஜூலை 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org